Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-14 6:26 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் விளம்பரம்™ • VLAMBARAM™ Canada's Oldest Tamil Newspaper




35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca T el: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 22 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 15, 2025

# மத்திய அரசின் ஒரு ரில்லியன் டொலர் முதலீட்டுத் திட்டம்

கனடிய மத்திய அரசின் நிதி அமைச்சர் பிரான்சுவா-பிலிப் ஷம்பெயின் கனடிய பிரதமர் மார்க் காணியின் தலைமையில் தனது முதலாவது வரவு-செலவுத் திட்டத்தை 2025 நொவெம்பர் 4ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த வரவு-செலவுத் திட்டத்தின்மூலம் மத்திய அரசாங்கம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஒரு ரில்லியன் டொலரை ($100 கோடி) முதலிட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டம் 493 பக்கங்களைக் கொண்ட புத்தகமாக 'வலிமையான கனடா' (Canada Strong) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. கனடாவின் உலகளாவிய போட்டித் தன்மையை அதிகரிக்க உதவும் முகமாக மொத்தமாக $280 பில்லியன் டொலரை இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக மத்திய அரசு முதலிட உள்ளதாக நிதியமைச்சர் பிரான்சுவா-பிலிம் ஷம்பெயின் தெரிவித்தார். இதன்மூலம் அடுத்த ஐந்து வருட காலத்தில் $1 ரில்லியனை முதலீடாகத் தனியார் மற்றும் பொது நிதிகளில் இருந்து ஈர்க்க முடியும் என்றார். இம் முதலீடுகள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மின் கட்டமைப்புக்கள் (Electrical Grids) பாதுகாப்பு, வீட்டுவசதி என்பவற்றில் செய்யப்படுவதுடன் இவை கனடாவின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும்.

இதனால் 2025-2026ஆம் நிதியாண்டிற்கான இந்த வரவு-செலவுத் திட்டத்தில் $78.3 பில்லியன் துண்டு விழுகிறது. மத்திய அரசு தனது 2029-2030ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இத்துண்டு விழும்தொகை $56.6 பில்லியனுக்குக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கிறது.

பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக முதலிடப்படும் மத்திய அரசின் இந்தத் திட்டத்தில் கனடியர்கள் தேவையான தியாகங்களைச் செய்ய வேண்டும் என கனடியப்பிரதமர் மார்க் காணி எச்சரிக்கை விடுத்துள்ளார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசின் செலவினங்கள் $60 பில்லியனால் குறைக்கப்படும் என இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2029ஆம் ஆண்டு இறுதிக்குள் அரச பொதுத்துறையில் வேலை செய்யும் பணியாட்களின் எண்ணிக்கை 40,000ஆல் குறைக்கப்படும். இதன்மூலம் 10%ஆன பொதுத்துறைப் பணியாளர்களது எண்ணிக்கை குறைக்கப்படும்.

இதன்மூலம் அரச பொதுச் சேவையில் பணிபுரியும் பணியாட்களின் எண்ணிக்கை 2021ஆம் ஆண்டில் பணிபுரிந்தவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகக் கொண்டு வரப்படும். இப்பணிக்குறைப்பு, வேலை நீக்கம் செய்வதன்மூலம் அல்லாமல் பணியில் இருந்து ஓய்வு பெறுபவர்களது எண்ணிக்கை மூலம் அடையப்படும்.



The Prime Minister, Mark Carney, holds up copies of the 2025 Canada budget. Thanks: The Canadian Press/Shutterstock

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வரும் முதலாவது அதிகூடிய முதலீடாக இருப்பது கனடாவின் பாதுகாப்பு விவகாரங்களில் முதலிடப்படும் $56.6 பில்லியன் முதலீடாகும்.

இந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2%ஐயும், 2035ஆம் ஆண்டுக்குள் இதை 5%ஆக அதிகரிப்பதாகவும் நேட்டோ நிர்ணயித்த இலக்கை கனடா அடையும் என மார்க் காணி ஏற்கனவே உறுதியளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திட்டமிடப்பட்டுள்ள மத்திய அரசின் உள்கட்டமைப்பு முதலீடுகளுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் $115.2 பில்லியனை மத்திய அரசு முதலிட உள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசு தனது உள்கட்டமைப்பு முதலீடுகளை அதிகரித்த அளவு வேகத்துடனும் அதிகரித்த அளவு எண்ணிக்கையுடனும் செயல்படுத்த எண்ணியுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசின் புதிதாக நியமிக்கப்பட்ட 'பெரிய செயற்திட்டங்கள் அலுவலகத்திற்கு' (Major Projects Office) $213.8 மில்லியனை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒதுக்கி உள்ளது. அத்துடன் இந்த அலுவலகத்திற்கு (MPO) பெரிய செயற்திட்டங்களை கனடாவில் நடைமுறைப்படுத்த மத்திய அரசு விதித்துள்ள விதிமுறைகளை மதிப்பாய்வு செய்து அவற்றைச் சீர்திருத்தி விரைவில் பெரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த அனுமதி அளிக்க வழிமுறைகளைக் கண்டுபிடித்து அமலாக்க வேண்டும் எனப் பணிப்புரையும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த MPO அலுவலகம் கனடாவின் மாகாணங்கள் மற்றும் பிராந்தியங்களை ஒருங்கிணைத்து நாடு தழுவிய பெரிய செயற்திட்டங்களை உருவாக்க வழிவகுக்க வேண்டும் எனவும், தனியார் நிதியுதவியுடன் திட்டமிடப்பட்டுள்ள பெரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த விரைவில் அரச அனுமதிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் இந்த அலுவலகத்திற்கு மத்திய அரசு வழங்கிய பணிப்புரையில் கேட்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் செயற்திட்டங்களுக்கு கனடியப் பூர்வீகக் குடிமக்களுக்கான முதற்குடிமக்கள் (First Nations), மேரி (Metis) மற்றும் இன்யூட் (Inuit) மக்களுடன் கலந்து ஆலோசனை செய்வதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் $10.1 மில்லியனை மத்திய அரசு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒதுக்கியுள்ளது.

கனடா உள்கட்டமைப்பு வங்கிக்கு (Canada Infrastructure Bank) இவ்வரவு செலவுத் திட்டம் மேலதிகமாக $10 பில்லியனை வழங்கியுள்ளது. இத்துடன் இந்தக் கனடா உள்கட்டமைப்பு வங்கிக்கு (CIB) மத்திய அரசு வழங்கியுள்ள மொத்தப் பண உதவி $45 பில்லியன் ஆகும். அத்துடன் மத்திய அரசு CIB பண உதவியை MPO அலுவலகம் அனுமதி அளித்த எந்தப் பெரிய செயற்திட்டங்களுக்கும் வழங்கலாம் எனவும் இவ்வரவு செலவுத்திட்டம் மூலம் அனுமதி அளித்துள்ளது.

கனடியப் பூர்வீகக் குடிமக்களுக்கு வீட்டு வசதி மற்றும் சுத்தமான குடிநீர் வழங்கும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு வழங்கப்படும் முதலீட்டு நிதியை CIB மேலதிகமாக $2 பில்லியனால் அதிகரிக்கும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசு ஒரு புதிய 'சமூகங்களை வலுவாகக் கட்டியெழுப்பும் நிதி' (Build Communities Strong Fund) ஒன்றை உருவாக்கி அதில் $51 பில்லியனை முதலிட்டுள்ளது. இது பத்து ஆண்டுகளுக்குக் கனடாவில் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றில் கவனம் செலுத்தும். அத்துடன் இந்நிதி கனடா முழுவதும் சமூகங்களை எதிர்காலத்திற்குத் தயாராக்க மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு வழங்கப்படும். பத்து ஆண்டுகளின் பின்னர் இந்நிதிக்கு மத்திய அரசு வருடம்தோறும் $3 பில்லியனை வழங்கும்.

இந்த $51 பில்லியனில் $17.2 பில்லியன் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கும் முகமாகச் செய்யவேண்டிய உள்கட்டமைப்புகள் அமைக்க (வீதிகள், நீர் வழங்கும் மற்றும் கழிவு நீர் செல்லும் திட்டங்கள் அமல்படுத்த), சுகாதார வசதிகள் வழங்கும் உள்கட்டமைப்புகள் அமைக்க (மருத்துவமனைகள்) மற்றும் மேற்படிப்பு வழங்கும் உள்கட்டமைப்புகள் அமைக்க (கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள்) வழங்கப்படும். ஆனால், இந்த உதவியைப் பெற மாகாணங்களும், பிரதேசங்களும் அதே அளவு நிதியை

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# House for Sale / Lease / Condo / BSMT

## Condo for Lease (Brand NewCondo)

* North East view
* 2 Bed Room
* 2 Washroom
* 2 years New Luxury condo
* Huge Balcony
* 1 Parking
* Easy Access to Hwy, TTC, Schools Amenities

(Kennedy / Highway 401)

**Available Nov. 01/2025**

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Sale

- 1 Bed Room + DEN
- 1 Full Washroom
- 1 Parking
- 686 Sq. Ft.

+ 74 Sq. Ft. terrace

Walking Distance to Subway

Don Mills / Eglinch

Vishal **
Call : 416 629 1973

## Detached Home for Sale

3 Bed Room Renovated
(West Rouge Neighbour hood - Toronto)

Walk to Beach....
Go Station
and TTC
Please Call.......

Amal Joseph*
Call : 416 300 8294

## Commercial Space for Lease

417 Sq. Feet
Office Space
GTA Square
2nd Floor

George P *
Call : 416 277 7054

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

* Sales Rep.
** Broker

Tel: 416-321-6969

* Independently owned and operated.

Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-14 6:26 PM Page 3




# ATTENTION REALTORS & HOME BUYERS



Available Till Midnight Including Weekends & Holidays

**ANTON DHARMASEELAN**
MORTGAGE BROKER
#2 Mortgage Alliance Agent in All of Canada & #1 in GTA

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| Purchase | Major Banks |
| Refinance | Alternative Lenders |
| Self Employed | B Lenders |
| Bad Credit | Credit Unions |
| Investment Property | Trust Companies |
| Renewal | Private Lenders |

## 416 704 1200

anton@myhomemls.ca
Corporate:: #1410-5140 Yonge Street

Broker #10530
MORTGAGE ALLIANCE

Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-14 6:26 PM Page 4



# தமிழர் தொடர்பாக இலங்கை அரசுகளின் நிலைப்பாடு

## – அரவின் –

முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா? என்பது பழமொழி.

என்னதான் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தாலும், இலங்கையின் ஆட்சியாளர்களின் அடிப்படை மனோபாவங்களில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

சிங்கள பௌத்த பேரினவாதம் எப்போதுமே தனது நிலையில் இருந்து மாறிக் கொள்வதில்லை.

ஆட்சிக்கு வருகின்ற கட்சிகள் வெவ்வேறாக இருந்தாலும், அவற்றின் அணுகுமுறைகளில், அடிப்படைக் குணவியல்புகளில் அத்தகைய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது.

2024ஆம் ஆண்டுவரை, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சி வழிவந்த கட்சிகளே மாறி மாறி ஆட்சி அமைத்துக் கொண்டிருந்தன. அதனால் இத்தகைய ஆட்சி மாற்றங்களால் எந்த அடிப்படை மாற்றங்களும் இருக்கவில்லை.

கடந்த ஆண்டு நிகழ்ந்த ஆட்சி மாற்றம் நீலம் மற்றும் பச்சைக்கு அப்பாற்பட்டதாக - புதிதாக சிவப்பு என்ற வர்ணத்தை அதிகாரத்திற்குக் கொண்டுவந்தது.

இதுவரை ஆட்சிக்கு வராத ஒரு தரப்பான தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்தபோது, அந்த மாற்றத்தை சாதகமானதாகக் கருதியவர்கள் பலர். அது வரவேற்கத்தக்க ஒன்றாகப் பார்க்கப் பட்டது, வித்தியாசமான ஒன்றாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஓராண்டு காலத்தை நிறைவு செய்துள்ள இந்த அரசாங்கம், நாங்கள் ஒன்றும் வேறுபட்டவர்கள் அல்ல என்பதை அவ்வப்போது நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

ஜேவிபியின் பின்புலத்துடன் உருவாக்கப் பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழ் மக்களின் பிரச்சினைகள் விடயத்தில் அவர்களுக்கான தீர்வுகள் விடயத்தில் முன்னர் இருந்த அரசாங்கங்களைவிட விலகியே நிற்கிறது.



மஹிந்த ராஜபக்சவையோ, சந்திரிகா குமாரதுங்கவையோ அல்லது ஜேஆர். ஜயவர்த்தனவையோகூட, முன்பிருந்த தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களால் இலகுவாகச் சந்திக்க முடிந்தது. பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடிந்தது.

ஆனால் கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ்க் கட்சிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர்பு இடைவெளி குறைந்து போனது. இப்பொழுது அது மேலும் மோசமாகி இருக்கிறது.

இலங்கை தமிழரசு கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம், வேண்டுகோள் விடுத்தது.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் விடுக்கப் பட்ட இந்த வேண்டுகோள் தொடர்பான கடிதத்திற்கு, இன்றுவரை ஜனாதிபதியிடமிருந்து பதிலே வரவில்லை. இந்த விடயத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு விடயத்திலும் இதுபோன்ற நிலையே காணப்படுகிறது.

மாற்றங்களின் ஊடாக ஆட்சிக்கு வந்ததாகக் கூறிக்கொண்ட அரசாங்கம் தான், இப்படி நடந்து கொள்கிறது. இது வேடிக்கையாகக்கூட இருக்கலாம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் கண்டு கொள்வதுமில்லை, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அவற்றை எடுத்துச் சொல்ல முனைவதற்கு அனுமதிப்பதும் இல்லை.

தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே ஒரு சுவர் கட்டி எழுப்பப்படுகிறது.

முன்னைய ஆட்சியாளர்கள் பிரச்சினையைக் கேட்டறிந்து கொள்வர், ஆனால் அவற்றைத் தீர்க்கமாட்டார்கள்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் அப்படி அல்ல, பிரச்சினைகளைக் கேட்பதும் இல்லை, அதற்கு நேரம் ஒதுக்கத் தயாராகவும் இல்லை. இதனால் பிரச்சினைகளின் எண்ணிக் கையும் அவற்றின் தாக்கங்களும் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

மிக அண்மையில் புத்தசாசன, சமய, கலாசார விவகாரங்கள் அமைச்சர் பேராசிரியர் சுனில் செனவி ஒரு விசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

அது தொல்பொருள் ஆலோசனைக் குழு ஒன்றை நியமிப்பதற்கான அறிவிப்பு. பொலன்னறுவ ரஜமகா விகாரையின் அனுநாயக்க தேரர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த 19 பேர் கொண்ட தொல்பொருள் ஆலோசனைக் குழுவில், முற்றுமுழுதாக சிங்களவர்களே இடம்பெற்றிருக்கின்றனர்.

இலங்கையின் சனத்தொகையில் 74.1 வீதமானவர்கள் மாத்திரமே சிங்களவர்கள். ஆனால், இந்த தொல்பொருள் ஆலோசனைக் குழுவில் 100 வீதமும் சிங்களவர்களே இடம்பெற்றிருக்கின்றனர்.

12.3 வீத சனத்தொகையை கொண்ட தமிழருக்கோ, 10.5 வீத சனத்தொகையைக் கொண்ட முஸ்லிமுக்கோ எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை.

ஏனைய இனங்களுக்கான பிரதிநிதித்துவம் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற _ தமிழரை ஓரம்கட்டி ஒதுக்குகின்ற செயல்கள் பல்வேறு விடயங்களில் நடந்து கொண்டிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்து ஓராண்டுக்கு மேலாகி விட்டது, இதுவரையில் அமைச்சரவையில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர் ஒருவருக்குக்கூட இடமளிக்கப்படவில்லை.

இந்தச் செயற்பாடுகள் அனைத்துமே அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் காது கொடுத்துத் கேட்கும் நிலையிலோ, அவற்றைத் தீர்க்கும் நிலையிலோ இல்லை என்ற புரிதலையே ஏற்படுத்துகிறது.

இனவாதமற்ற ஆட்சியை நடத்துவதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அடிக்கடி கூறிக் கொள்கிறாரே தவிர அப்படியான ஆட்சியை நடத்தவில்லை.

அவர் தமிழரிடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறார், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வல்லமையுடன் அவர் தமிழரை அணுகவில்லை.

பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டால் அதனைத் தீர்க்க வேண்டும், அவற்றைத் தீர்க்க முடியாத நிலையில் அல்லது தீர்க்க விரும்பாத நிலையில் இருப்பவர், அதனைக் கேட்காமலே, பிரச்சினைகளிலிருந்து நழுவிக்கொள்ள முற்படுகிறார்.

தொல்பொருள் ஆலோசனைக் குழு நியமன விவகாரம் சாதாரணமான ஒன்று அல்ல. ஏனென்றால், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட முழு நாட்டிலும் தொல்பொருள் சின்னங்கள் சிதறி பரவி கிடக்கின்றன.

அவற்றை ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டறிந்து வரலாற்றை சரியாக முன்வைக்க வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கம், இந்த ஆலோசனைக் குழுவை நியமித்ததன் மூலம், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மீண்டும் நிறுவ முயன்றிருக்கிறது.

தொல்பொருள் திணைக்களம் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய இடங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறது.

இது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது, இவ்வாறான நிலையில் தொல்பொருள் ஆலோசனைக் குழுவில் முற்றுமுழுதாக சிங்களவர்கள் இடம்பெற்று இருப்பது இந்த ஆக்கிரமிப்பு மேலும் மேலும் தீவிரமடைவதற்கே வழிவகுக்கும்.

இப்படி ஒரு நிலை கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியிலும் காணப்பட்டது.

அப்பொழுது ஞானசார தேரர் உள்ளிட்ட 19 பேர் கொண்ட தனிச் சிங்களவர்களைக் கொண்ட தொல்பொருள் செயலணி நியமிக்கப்பட்டது. அதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்தன. ஆனாலும் கோட்டாபய ராஜபக்ச கடைசி வரை தனது பிடியை விலக்கிக்கொள்ள வில்லை. அதே போலத்தான் அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கமும் செயல்படுகிறது.

அவர்களும் இதேபோலத்தான், அமைச்சரவையில் தமிழருக்கு இடமளிக்க வில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றபோதும், தமிழரோ முஸ்லிமோ இல்லாத தனி சிங்களவர்களைக்கொண்ட ஒரு தொல்பொருள் ஆலோசனைக் குழுவை நியமித்திருக்கிறது.

தமிழருக்கும் இங்கு ஏராளமான தொல்பொருள் சின்னங்கள், அகழ்வாய்வு களங்கள் இருக்கின்றன.

அப்படியிருந்தபோதும், தமிழருக்கு இடமளிக்காமல், முற்றிலும் சிங்களவர்களை கொண்டு இந்த ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டிருப்பது ஒரு மோசமான நிலை.

சிங்கள பௌத்த தேசியவாதம் ஒரு போதும் தன்னிலையில் மாற்றம் செய்யாது என்பதையே இது உணர்த்தி நிற்கிறது.

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-14 6:26 PM Page 5



# மத்திய அரசின் ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்களும் ஒதுக்க வேண்டும். இதை மாகாணங்களும், பிரதேசங்களும் அவர்கள் உள்கட்டமைப்புகள் அமைக்க விதிக்கும் கட்டணங்கள் மற்றும் வரிகளைத் தவிர்ப்பதன் மூலம் அடையலாம்.


Canadian Prime Minister Mark Carney
Thanks: Aljazeera

இந்த $51 பில்லியனில் $6 பில்லியன் பெரிய கட்டிடங்களைப் புனரமைக்க மற்றும் காலநிலை மாற்றத்தைத் தடுக்கும் திட்டங்களை அமல்படுத்த வழங்கப்படும். ஆனால், இந்த நிதியுதவியைப் பெற தனியார் துறையும் இதே அளவு நிதியை முதலிட வேண்டும். இந்த $51 பில்லியனில் மீதமான $27.8 பில்லியனும் சமூகங்களைக் கட்டியெழுப்பும் உள்கட்டமைப்புகள் அமைக்க வழங்கப்படும்.

கனடிய மத்திய அரசில் லிபரல் கட்சி சிறுபான்மை அரசாக இருப்பதால் நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற அதை ஆதரித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் வாக்களிக்க வேண்டியநிலை மத்திய அரசிற்கு உள்ளது.


2025 federal budget titled Canada Strong
Thanks: Adam Huras /Brunswick News

இதனால் நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற எதிர்க் கட்சிகளில் இருந்து ஆட்களை தமக்கு ஆதரவாகச் சேர்ப்பதற்கு தான் எப்போதும் தயாராக இருப்பதாக மார்க் காணி ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், “எனது பார்வையில் நான் எப்போதும் யாருடனும் பேசுவதற்குத் தயாராக உள்ளேன்” என்று கூறினார்.


François Philippe-Champagne and Mark Carney
Thanks: Justin Tang/The Canadian Press

இக்கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த பழமைவாதக்கட்சியின் அவைத் தலைவரான Andrew Scheer, ‘ஜனநாயக விரோத வழிமுறைகள் மூலமும், பின்வழியால் நடத்தப்படும் ஒப்பந்தங்கள் மூலமும் மற்றும் தந்திரோபாயங்களை உபயோகித்தும் அழுத்தங்களைப் பிரயோகித்தும் மார்க் காணி பெரும்பான்மையைப் பெற முயற்சிக்கிறார்” என்றார்.

லிபரல் கட்சி நாடாளுன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர் பழமைவாதக்கட்சியின் சார்பில் நோவாஸ்கோசியா மாகாணத்தின் Acadie-Annapolis தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான


Prime Minister Mark Carney holds up a copy of the budget
Thanks: Justin Tang / The Canadian Press

Christopher d'Entremon பழமைவாதக் கட்சியில் இருந்து விலகி லிபரல் கட்சியில் சேர்ந்தார். இதைத் தொடர்ந்து இவருக்கு எதிராகக் கொலை மிரட்டல்கள் வருவதாகவும் அவற்றைக் கனடிய காவல்துறையினர் (RCMP) விசாரணை செய்து வருவதாகவும் ஊடகங்களுக்குக் காவல்துறை தெரிவித்துள்ளது.


Conservative Leader Pierre Poilievre
Thanks: Adrian Wyld/The Canadian Press

நொவெம்பர் 6ஆம் திகதி பழமைவாதக் கட்சியின் சார்பில் அல்பேட்டா மாகாணத்தில் Edmonton - Riverbend தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான Matthew Jeneroux தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதாகத் தெரிவித்தார். அவர் தனது குடும்பத்துடன் அதிக நேரத்தைச் செலவிட விரும்புவதாலேயே பதவி விலகுவதாகக் கூறினார். அவர் தான் எப்போது பதவி விலகுவதாகக் கூறாவிட்டாலும் அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்தும் நன்றியும் தெரிவித்த பழமைவாதக் கட்சியின் தலைவர் Pierre Poillievre அவர் இன்னும் சில மாதங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பார் எனக் கூறினார். ஆனால், Matt Jeneroux நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட அது அதன்மீது நடைபெறும் மூன்று வாக்களிப்புகளிலும்


Finance Minister Francois-Philippe Champagne
Thanks: BBC

பெரும் பான்மை வாக்குகளைப் பெற வேண்டும். புதிதாக பழமைவாதக்கட்சியில் இருந்து லிபரல் கட்சிக்கு வந்து சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினருடன் தற்போது லிபரல் கட்சிக்கு 170 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளனர். இதில் ஒருவர் சபாநாயகராக இருப்பதால் லிபரல் கட்சியிடம் 169 வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

கனடிய நாடாளுமன்றத்தில் 343 உறுப்பினர்கள் உள்ளனர்.

| | |
|---|---|
| லிபரல் கட்சி உறுப்பினர் | 170 |
| பழமைவாதக்கட்சி உறுப்பினர் | 142 |
| Matt Jeneroux - வெற்றிடம் | 1 |
| புளக்குவிபெக்குவா உறுப்பினர் | 22 |
| புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர் | 7 |
| பசுமைக்கட்சி உறுப்பினர் | 1 |
| மொத்தம் | **343** |

இவர்களில், சபா நாயகர் மற்றும் Matt Jeneroux தவிர 341 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 171 வாக்குகளை லிபரல் கட்சி பெற்றால் நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும். வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நம்பிக்கைத் தீர்மானமாகக் கருதப்படுவதால் வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் படாவிட்டால் மத்திய அரசு கவிழ்ந்து மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடத்தப்பட


Canada's Prime Minister Mark Carney
Thanks: BBC

வேண்டும். இதுவரை நடந்த இரண்டு வாக்கெடுப்புகளிலும் வரவு-செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளது. வரவு-செலவுத்திட்டம் மீதான இறுதியானதும், மூன்றாவதுமான வாக்கெடுப்பு நொவெம்பர் 17ஆம் திகதி நடைபெற உள்ளது. அதற்கு முன்னர் லிபரல் கட்சி தமக்கு தேவையான ஆகக்குறைந்த இரண்டு வாக்குகளைப் பெற தீவிரமாக முயற்சி செய்வார்கள் என ஊடகவியலாளர் கருத்து தெரிவிக்கின்றனர்.






# மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா?

**– முகிலன் –**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் செயற்படுவது தொடர்பாகக் கதைகள் அடிபடத் தொடங்கியிருக்கின்றன.

அண்மையில் வவுனியாவில் நடந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டதாகக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் கூறியிருந்தார்.

தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுடன் இணங்கி வந்தால், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் (சங்கு கூட்டணி) சேர்ந்து மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்பட முடியும் என அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்ற விளக்கத்தை சுமந்திரன் வெளிப்படுத்தவில்லை.

தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு என்பது அந்தக் கட்சியின் நிபந்தனையை வெளிப்படுத்துகிறது.

நிபந்தனையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவதற்குத் தயார் என்பதே அந்த அறிவிப்பின் வெளிப்படையான விடயம் ஆகும். ஆனால், நிபந்தனையின் அடிப்படையில் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் தயாராக இருக்கின்றனவா என்பது சந்தேகம்.

ஏற்கனவே, ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த முன்நிபந்தனைகளை நிராகரித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு தேர்தல் உடன்பாட்டைச் செய்திருந்தன.

அதனை ஒரு கொள்கைக் கூட்டு என்று வர்ணித்திருந்தனர். அந்தக் கூட்டில் அண்மைக்காலமாக ஒரு விரிசல் தோன்றியிருக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை வலியுறுத்தி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அண்மையில் கூட்டங்களை நடத்தியதை அடுத்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிருப்தி அடைந்திருக்கிறது.



இது தங்களுடன் செய்துகொண்ட உடன்பாட்டை மீறுகின்ற செயல் என்றும், அதனை முறித்துக் கொள்வதாக அர்த்தம் என்றும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருந்தார்.
இந்தக் கூட்டணி நிலைத்திருப்பது தமிழரசுக் கட்சிக்கு ஆரோக்கியமானது அல்ல, அதற்கு ஆபத்தானது.

எனவே அந்தக் கூட்டை உடைக்க வேண்டும் என்பது தமிழரசுக் கட்சியின் அல்லது சுமந்திரனின் நோக்கமாக இருக்கலாம்.

அதனை அடிப்படையாக வைத்து, மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கான முன்நிபந்தனைகளை அவர் அறிவித்திருக்கிறார்.

மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட முடியாது, கூட்டாகச் சேர்ந்து போட்டியிட்டால்தான் ஆட்சியைப் பிடிக்க முடியும். எனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை தன் பக்கம் இழுப்பதற்கு சுமந்திரன் வியூகம் வகுக்கிறார். அவர் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவியைக் குறிவைத்து செயற்படுகிறார் என்பது அப்பட்டமான உண்மை. அதனை அவர் பலமுறை வெளிப்படையாகக் கூறியும் உள்ளார்.

எனவே அவர் இந்த விடயத்தில், தனக்குச் சாதகமான நிலையை உருவாக்குவது ஆச்சரியமில்லை.ஆனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை தமிழரசுக் கட்சி தன் வியூகத்திற்குள் கொண்டுவருவது உடனடிச் சாத்தியமாகத் தெரியவில்லை.

ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் அதன் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி, நாங்கள் ஏற்கனவே தமிழ்த் தேசிய பேரவையுடன் ஒரு கூட்டணி உடன்பாட்டில் இருக்கிறோம், பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னரே இதுபற்றித் தீர்மானிக்க முடியும் என அறிவித்துள்ளார்.

இதுமாத்திரம் இதற்குத் தடையாக உள்ள விடயம் அல்ல. அதற்கு அப்பால் இன்னொரு சிக்கலும் இருக்கிறது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இப்பொழுது இடம்பெற்றுள்ள சமத்துவக் கட்சி ஒரு சிக்கலான காரணியாக இருக்கிறது.

சமத்துவக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் கிளிநொச்சியில் கடும் போட்டி இருக்கிறது. அந்த முரண் சந்திரகுமார் எதிர் சிறிதரன் என்ற ரீதியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது.இந்தப் போட்டி முடிவுக்கு வரக்கூடிய ஒன்றல்ல.

இரண்டு பேரும் ஒன்றிணையக்கூடிய சாத்தியமும் இல்லை. எனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் தமிழரசுக் கட்சி இணைந்து செயற்படுவதானால், சமத்துவக் கட்சியை வெளியே விடவேண்டி இருக்கும். அல்லது சிறிதரனை கட்சியை வெளியே தள்ளிவிட்டு சமத்துவக் கட்சியுடன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை அரவணைக்க வேண்டி இருக்கும். இதில் எது நடக்கப் போகிறது என்று தெரியவில்லை.

சிறிதரனை வெளியே தள்ளிவிட்டு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை உள்ளே கொண்டு வருவதால், சுமந்திரனுக்கு அல்லது தமிழரசுக் கட்சிக்கு பெரிய இலாபம் கிடைக்காது.

ஏனென்றால் கிளிநொச்சி சிறிதரனின் கோட்டையாக உள்ளது. அங்கு அவரை அடிப்படையாகக்கொண்ட கட்சிக் கட்டமைப்புத்தான் உள்ளது. அதனை உடைப்பது, சுமந்திரன் தனக்குத்தானே சூனியம் வைத்துக்கொள்வதாக அமையும். அதேவேளை, நேரடியாக சிறிதரனுடன் மோதுவதைத் தவிர்த்து சுமந்திரன் மறைமுகமாக மோதுகிறார்.

தென்னிலங்கையில் தனக்கு உள்ள ஆதரவு மற்றும் அறிமுகங்களைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள்மூலம் சிறிதரனை எதிர்க்கத் தொடங்கி இருக்கிறார்.

அரசியலமைப்பு சபையில் அங்கம் வகிக்கும் சிறிதரன், சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாக நடந்துகொள்ளாமல், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டு சாமர சம்பத் தசநாயக்கவினால் சுமத்தப்பட்டிருக்கிறது.
தன் மீதான இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளைத் தடுப்பதற்காகவே அவர் அவ்வாறு செயற்படுவதாக நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று சிறிதரன் மறுத்திருக்கிறார். தன் மீதான குற்றச்சாட்டை நிரூபித்தால் தான் அரசியலில் இருந்து விலகத் தயார் என்றும் கூறியிருக்கிறார்.

சாமர சம்பத் தசநாயக்க சரவெடிபோல வெடிப்பவர், பரபரப்புக்காகப் பேசுபவர். அவர் சிறிதரன்மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டதல்ல, சிறிதரனுக்கு குடைச்சல் கொடுப்பதற்காகவே அவர் அவ்வாறு செயற்பட்டிருந்தார்.

அவரை அரசியலமைப்பு சபையில் இருந்து அகற்றும் நோக்கம் பல தரப்புகளுக்கு உள்ளன.

நாடாளுமன்றத்தில் சாணக்கியனை முன்னிலைப்படுத்துவதற்கு சுமந்திரன் முக்கியத்துவம் கொடுக்கிறார். அதற்கு சிறிதரன் தடையாக இருப்பதால் அவரை, அதிலிருந்து அகற்றுவதற்கு முற்படுகிறார்.

ஒற்றுமை பற்றிப் பேசினாலும் உள்ளுக்குள் வஞ்சகமும் சூழ்ச்சிகளுமே தமிழ்த் தேசிய அரசியலில் அதிகம் காணப்படுகிறது.

தமிழ் தேசிய அரசியலில் கூட்டமைப்பாக செயற்படுவது என்ற கோஷங்கள் முன்வைக்கப்படுவது அரசியல் நலன்களுக்காகவே தவிர, இன நலன்களை மையப்படுத்தியதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசிய அரசியலின் இன நலன் இப்பொழுது சுயநல அரசியலுக்குள் அகப்பட்டிருக்கிறது. அதனால் எந்த ஒரு கட்சியும் கூட்டாக செயற்படுவோம், ஒருங்கிணைந்து செயல்படுவோம் எனக் கிளம்பும்போது அதுபற்றி மக்கள் சந்தேகிக்கின்ற நிலையே ஏற்படுகிறது.

தேர்தலுக்குத் தேர்தல் அவர் தனது முகத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் அரசியலில் மீண்டும் வெற்றி பெறுவதற்கு, இழந்த இடத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொற்றிக்கொள்ள விரும்புகிறார். ஆனால் ஏனைய தரப்புகள் அதற்கு இடமளிக்குமா? என்பது சந்தேகம்.

*Get in touch for your perfect home!*

PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front  2025-11-14  6:26 PM  Page 7



# அரிசிக்கு பிச்சை எடுத்த தமிழ்நாடு, பட்டினியை ஒழித்த வரலாறு

**தொகுப்பு :கண்ணன்**

தமிழ்நாட்டில் நடந்த முக்கிய சமூக மாற்றங்கள் பற்றி இங்கே பேச விரும்பு கிறேன். ஏனெனில், தமிழ்நாட்டின் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம், தமிழர் கடந்த 60-70 ஆண்டுகளில் ஏற்படுத்திய சமுதாய மாற்றங்கள்தான்.

வறுமையை ஒழிப்பது என்பது ஒருபக்கம் இருக்க பசிப்பிணி அகற்றுவது என்பதே தமிழகத் தமிழருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. 2000 ஆண்டுகள் கனவு அது.

எழுத்தாளர் புதுமைப்பித்தன் ‘பொன்னகரம்’ என்று ஒரு சிறுகதை எழுதியிருக்கிறார். அந்தக் கதையில் பெண்ணின் கணவருக்கு உடல் நலம் இல்லை. அவருக்கு மருந்து வாங்க வேண்டும். ஆனால், வீட்டில் கஞ்சி காய்ச்சவே வழி இல்லாமல் இருக்கிறது. அது தெரியாமல் அவள் கணவன், “எனக்கு பால் கஞ்சி வேணும் வச்சி தர்றியா” என்று கேட்கிறான். என்ன செய்வதென்று தெரி யாமல் அவள் வீட்டை விட்டு வெளியேறு கிறாள். நீண்ட நாட்களாக அவள் மீது ஆசை வைத்திருக்கும் ஒருவன் அப்போது அந்த வழியாக வருகிறான். “நான் பணம் தருகிறேன், நீ வர்றியா” என்று கேட்கிறான். இவள் சரி என்று அவனுடன் போகிறாள்.

இப்படிப்பட்ட நிலைதான் அக்காலத்தில் இங்கே இருந்தது. அதாவது, உடல்நலம் இல்லாதவனுக்குக் கஞ்சி கூடக் கொடுக்க முடியாத நிலை.

இதுபோல் அக்கால வறுமையைச் சொல்லும் ஒரு கதையை விந்தன் எழுதி உள்ளார். அந்தக் கதையில் சென்னை யில் இருக்கும் தஞ்சாவூரைச் சேர்ந்த ஒருவர் ஊரில் அறுவடை நடக்கும்போது ஊருக்கு வருகிறார். ஒரு நண்பர் வீட்டுக்குச் செல்கிறார். அந்த வீட்டில் இலை போட்டு, இவர் சாப்பிடும் அளவு தெரியாமல், நிறைய பரிமாறிவிடுகின்றனர். அதனால், முடிந்த அளவு சாப்பிட்டுவிட்டு, மீதியை இலையோடு சேர்த்து வெளியே கொண்டுபோடச் செல்வார். அப்போது அங்கே ஒருவன் நின்றுகொண்டு, “சாமி இலையைக் கீழே போட்டுவிடாதீர்கள். என் கையில கொடுங்கள்” என்பான். “ஏண்டா கையில கொடுக்கச் சொல்ற” என்று இவர் கேட்பார். “கீழே போட்டிங்கன்னா, அதுக்காக இங்க காத்திருக்கு பாருங்க இந்த நாயுடன் நான் சண்டை போடணும். கையில கொடுத்தீங்கன்னா நான் சாப்பிட்டு விடுவேன்” என்பான். இவர் அதிர்ச்சியாகி, “ஏண்டா இப்படி இருக்க; அறுப்பு வேலைக்குப் போகக்கூடாதா” என்பார். “அறுப்பு வருஷத்துல எல்லா நாளும் இருக்குமா? மீதி நாள்ல சில நாள் நடவு வேலைக்கு போகலாம். அதற்குப் பிறகு;” என்பான்.



ஜெ. ஜெயரஞ்சன், பேராசிரியர், பொருளியல் அறிஞர், தமிழ்நாடு அரசின் மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழு துணைத் தலைவர். இந்தக் கட்டுரை ஜெ. ஜெயரஞ்சன் நம்மிடம் பேசியதன் சுருக்கம்.

தி. ஜானகிராமனின் ஒரு சிறுகதை. திருச்சியில் ஒருவர் ரயில் ஏறுகிறார். அவருடன் ஒரு பையன் இருக்கிறான். அதே ரயிலில் ஒரு பெண் வருகிறார். அவருடன் ஒரு பெண்குழந்தை இருக்கிறாள். அந்தப் பெண் குழந்தைக்கு எட்டு வயது இருக்கலாம். இப்போது பயணங்களிலும் மொபைலைப் பார்த்துக் கொண்டே செல்வதுபோல் அப்போது இல்லை. சக பயணிகளுடன் பேசுவார்கள். அதன்படி அந்தப் பெண்ணிடம் இந்த ஆண் பேச்சுக் கொடுக்கிறார். அவர்களைப் பற்றி விசாரிக்கிறார்.

“இந்தக் குழந்தை இங்கே ஒரு ஜட்ஜ் ஐயா வீட்டில் வேலை செய்கிறாள். ஜட்ஜ் ஐயா சகலை கல்கத்தாவில் ஒரு பெரிய கம்பெனியின் மேனஜராக இருக்கிறார். அவர் வீட்டுக்கு இவள் வேலைக்கு போகிறாள்” என்கிறார் அந்த பெண். இவர் அந்த குழந்தையிடம், “நீ என்னென்ன வேலையெல்லாம் பார்ப்பம்மா” என்று கேட்கிறார். “எல்லா வேலையும் செய்வேன். துணி துவைப்பேன், பாத்திரம் கழுவேன், சமைப்பேன்” என்கிறாள்.

“காலையில் சாப்பிட்டியா?”

“ஆமா பழையது சாப்பிட்டேன்.”

“அங்க யாரெல்லாம் பழையது சாப்பிடுவாங்க?”

“நான் மட்டும்தான் சாப்பிடுவேன். வேறு யாரும் சாப்பிட மாட்டாங்க.”

“ஏன் நீ பள்ளிக்கூடத்துக்கு போகலை?”

“எங்க அப்பா சம்பளம் எங்க குடும்பத்துல எல்லாருக்கும் மத்தியான சாப்பாட்டுக்கே பத்தலை” என்கிறாள். சாப்பாட்டுக்கு வழியில்லாததால் எட்டு வயதுப் பெண் வேலைக்குப் போக வேண்டிய நிலை.

பட்டினி காரணமாக ஒரு பெண் சோரம் போகிறாள், ஒருவன் நாயுடன் சண்டை போடுகிறான், எட்டு வயதுப் பெண் அவள் சக்திக்கு மீறிய வேலைக்குப் போகிறாள். அதுவும் குடும்பத்திடம் பிரிந்து தஞ்சாவூரில் இருந்து கல்கத்தா போகிறாள். இப்படி தமிழ்ச் சமூகத்தின் மிகப் பெரிய அவலமாக ஒரு காலத்தில் பட்டினி இருந்தது.

கருணாநிதியிடம் ஒருமுறை, “நமது வரலாற்றில் உங்களுக்கு மிகப் பிடித்தது எது” என்று கேட்கும்போது, “மணி மேகலையின் கையில் இருந்ததாகச் சொல்லப்படும் அட்சய பாத்திரம்தான் எனக்கு மிகவும் பிடித்தது” என்று சொல்கிறார். அட்சய பாத்திரம் இருந்தால் இந்த சமுதாயத்தின் பட்டினிப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என அவர் கண்ட கனவை வெளிப்படுத்தினார். “பசியும் பட்டினியும் ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் அவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தது” என்று இன்றைய தலைமுறை யிடம் சொன்னால் நம்பமாட்டார்கள். ஏனெனில், அதனை அவர்கள் பார்த்த தில்லை. அனுபவித்தது இல்லை. ஆனால், முந்தைய தலைமுறைக்குத் தெரியும். இரண்டு தலைமுறைகளுக்கு இடையே இந்த சமூக மாற்றம் எப்படி நிகழ்ந்தது?

அதைப் பார்ப்போம்;

1967 சட்டப்பேரவை தேர்தலின்போது உணவு என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே அண்ணா, “ரூபாய்க்கு 3படி அரிசி போடுவோம்”என வாக்குறுதி அறிவித்தார்.

புதுமைப்பித்தன்போல், விந்தன்போல், தி. ஜானகிராமன்போல் பசியைப் பற்றி ராஜாஜியும் கதை எழுதியுள்ளார். ஆனால், ஆட்சியதிகாரம் அவர் கைக்கு வந்தபோது இந்த யோசனை அவருக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் அண்ணா அறிவித்து விட்டாலும் அப்போது அதைச் செயல் படுத்த முடியவில்லை. அதன்பின்னர் கருணாநிதி ஆட்சிக்கு வந்தபின்னர் இதைச் செயல்படுத்துவதற்கான திட்டங் களை வகுக்கத் தொடங்குகிறார். கருணா நிதியும் அக்கால பட்டினிபற்றி ‘குப்பைத் தொட்டி’ என்ற கதையை எழுதியுள்ளார்.

கருணாநிதி ஆட்சியில் 1972இல் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்படுகிறது. அதன் பின்னர் தமிழகம் முழுவதும் எல்லாக் குடும்பங்களு க்கும் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை கருணாநிதி தொடங்கியதற்குப் பின்னால் ஓர் அரசியல் இருக்கிறது. ஏற்கனவே பசுமைப் புரட்சியின் ஒரு பகுதி யாக ‘இந்திய உணவுக் கழகம்’ தொடங்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-14 6:26 PM Page 8



# நாமும் நமது இல்லமும் 689

## முதல் தடவை ஆதனம் வாங்குவோருக்கு அரசின் சலுகை



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஒன்றாறியோ மாகாண அரசு முதல் முறையாக புதிதாக நிர்மாணம் செய்யப் பட்டு விற்கப்படும் ஆதனங்கள் (விலை $1 மில்லியன்வரை) வாங்குவோருக்கு HSTஇன் 8% முழுத்தொகை திருப்பி வழங்க உள்ளது.

இதனுடன் மத்திய அரசின் 5% HST திருப்பிக் கொடுக்கும் தொகையும் சேர்க்கப்பட்டால், ஆதனம் வாங்குவோருக்கு மொத்தமாக அதிகபட்சம் $130,000 வரை சேமிப்புக் கிடைக்கும். ஆதன வசதி மலிவாகக் கிடைக்கவும் புதிய ஆதனங்கள் கட்டுமானத்தை ஊக்குவிக்கவும் உருவாக்கப்பட்ட புதிய திட்டமாகும்.

### இதன் முக்கிய விடயங்கள்:

* புதிய அல்லது முழுமையாகப் புதுப்பிக்கப்பட்ட ஆதனங்களுக்கு ஒரு மில்லியன் வரையான ஆதனத்திற்குரிய முழு 8% வரியை மாகாண அரசு திருப்பிக் கொடுக்கிறது.

* $1 மில்லியன் முதல் $1.5 மில்லியன் மதிப்புள்ள ஆதனங்களுக்கு திருப்பிக் கொடுக்கும் தொகை படிப்படியாகக் குறைக்கப்படும். குறைந்தது $24.000வரை நிவாரணம் கிடைக்கும்.

* மத்திய அரசின் 5% திருப்பித் தரப்படும் தொகையுடன் சேர்த்தால் மொத்த சேமிப்பு $130,000வரை இருக்கும்.

* இது முதன்முறையாக ஆதனம் வாங்குவோருக்கு மட்டுமே பொருந்தும். மேலும், அவர்கள் அந்த ஆதனத்தை முதன்மை வாழ்விடமாகவும் (Principal Home) பயன்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த திட்டம் 2025 மே 27ஆம் திகதி முதல் 2031ஆம் ஆண்டுவரை வாங்கப்படும் ஆதனங்களுக்குப் பொருந்தும். இவ்வாறு வாங்கப்படும் ஆதனங்களை கட்டுமான நிறுவனங்கள் 2036ஆம் ஆண்டுக்குள் நிர்மாணித்திருக்க வேண்டும்.

இத்திட்டம் மே 27, 2025அன்று மத்திய அரசு அறிவித்த HST திருப்பித் தரப்படும் தொகை திட்டத்தைப் போலவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று (Pandamic) காலத்தின் உச்ச விலை (March 2022) உயர்வுக்குப் பிறகு ரொறொன்ரோ நகரத்தின் புறநகர் பகுதிகளில் ஆதன விலைகள் மிக வேகமாக குறைந்துள்ளன. குறிப்பாக Durham, Peel மற்றும் Halton போன்ற பிராந்தியப் பகுதிகளில் (Regional Area) விலை சரிவு அதிகமாக உள்ளது.

### பிரதேசவாரியாக விலை மாற்றம்

- Durham : 2022 உச்ச நிலையில் இருந்து விலை 30.7% குறைந்தது.
  * தனி வீடுகள் (Detached homes)
  - 31% குறைந்து சுமார் $951,000.
- Peel : மொத்தம் 26.7% குறைவு
  * தனி வீடுகள் - 31% குறைந்து சுமார் $1.2 மில்லியன்.
- Halton : விலை 25.7% குறைந்து சுமார் $1.137 மில்லியன். விற்பனை நிலைமை பெரிதாக மாறவில்லை.
- York : விலை 22.2% குறைந்து சுமார் $1.234 மில்லியன்.
- Vaughan பகுதியில் தனி வீடுகள் - 28%, Markham பகுதியில்- 24% குறைவு.

அடமானக்கடனின் விகிதங்கள் உயர்ந்ததும், வாங்கும் சக்தி குறைந்ததும் பிராந்திய வீடுகளுக்கான கோரிக்கை (Demand) குறைந்ததுமே இதற்குக் காரணம். ரொறொன்ரோ நகர மையத்தில் விலை இறக்கம் குறைவாக உள்ளது. ஏனெனில், நகரில் வீட்டு விநியோகம் குறைவாக இருந்தது.

ரொறொன்ரோவில் ஆதன சந்தை தற்போதும் கீழ்நோக்கியே செல்கின்றது. இது ஒன்பதாவது மாதமாக ஆதன விலைகள் தொடர்ந்து குறைந்து வருவதுடன், விற்பனைகளும் குறிப்பிடத் தக்க அளவில் குறைந்துள்ளன. இந்த சரிவு காரணமாக Power of Sale எனப்படும் அடமானக் கடன் செலுத்த முடியாத ஆதனங்கள் விற்பனைப் பட்டியலில் குறிப்பாக நகர மையப்பகுதியில் அதிகரித்து வருகின்றன. அதேசமயம் சில வாங்குநர்கள் புதிய அடுக்குமனைக் கட்டிடங்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்கின்றனர். இதனால் அடுக்கு மனையின் வியாபாரமும் மிகவும் குறைந்துள்ளது.

இதற்குப்பின், தற்போதைய சந்தை நிலைமையால் சில புதிய, மற்றும் கட்டப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் செயற்பாடுகள் மாற்றப்படுகின்றன. சில திட்டங்கள் முற்றாக நிற்பாட்டப்படுகின்றன. சில திட்டங்கள் பின்தள்ளப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் அரசும், தனியான தொழில் நிறுவனங்களும் தமது தொழிலாளர்களை தொழிலிற்குரிய அலுவலகத்திற்கு கிழமையில் நான்கு (4) நாட்கள் வரவேண்டும் என்ற உத்தரவால் ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் அடுக்குமனையின் வாடகையின் நிலைமை சிறப்படைவதனையும் காணக்கூடியதாக உள்ளது. ரொறொன்ரோ மத்திய பகுதியில் இது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும்.

இந்நிலைமை தொடர்வதால் இதன் பாதிப்பு இரண்டு அல்லது மூன்று வருடங்களில் ஆதன வியாபாரத்தில் தெரியவரும்.

---

# சமத்துவமே எங்கள் உயிர்மூச்சு



யதுசனா சவுந்தரராசா
யாழ்ப்பாணம்

சமத்துவம், நவீன முன்னேற்றம், மனித உரிமை என்று உலகம் பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கும் இக்காலத்திலும், மனிதனின் மனநிலையால் கட்டப்பட்ட வர்க்கச் சுவர்கள் இன்னும் தகர்த்து எறியப்படாமல் இருக்கின்றன. கண்ணுக் குத் தெரியாதவை ஆனால் மனிதரில் இருந்து மனிதரைப் பிரிக்கும் சக்தியுடைய வேற்றுமைச் சுவர்கள். இவைதான் வகுப்பு மற்றும் சிறப்புரிமை எனப்படும் மறைந்திருக்கும் சுவர்கள். சமூகத்தின் அமைதியை மெதுவாகக் கொன்று, சமத்துவத்தின் அனைத்தையும் நிர்ணயிக்கும் இப்பிரிவினைகள், நம் பேச்சில் ஜனநாயகம் ஒலித்தாலும், நம் வாழ்வில் இன்னும் நிழலாய் ஆள்கின்றன. இன்றைய காலத்திலும் இதன் தாக்கத்தை இலங்கையில் மிகத் தெளிவாகப் பார்க்க முடியும். நூற்றாண்டுகளாக சமூக பழக்க வழக்கங்களில், கலாசாரத்தில், கல்வியிலும், இனம், சாதி, வகுப்பு போன்ற பிரிவுகள் ஆழமாகப் பதிந்துள்ளன. ஒரு மனிதனின் பெயர், தோற்றம், பேசும் வழக்கு இவையெல்லாம் அவரின் சமூக அடையாளமாக விளங்கி வந்தன. தமிழ் சமூகத்தில்கூட, சாதி என்ற மறைமுக சக்தி இன்னும் பலவழிகளில் மனிதர்களை ஆள்கின்றது. திருமணம், தொழில், சமூக மரியாதை அனைத்திலும் இதன் தாக்கம் மறைந்துகொண்டே இருந்தாலும், அழிந்து விடவில்லை.



துரதிர்ஷ்டவசமாக, இச்சுவர்களை நிலை நிறுத்துவது சுரண்டுபவர்கள் மட்டுமல்ல, சிலசமயம் ஒடுக்கப்பட்டோரும் பழக்கத்தாலும் பயத்தாலும் அதை ஏற்றுக் கொள்கின்றனர். இதுவே சிறப்புரிமையின் சாபம். அதைப் பெற்றவர்கள் அதனை மறந்து விடுகின்றனர், அதிலிருந்து விலக்கப்பட்டவர்கள் அதை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் உண்மையான மனிதநேயம் என்பது மரியாதையை அளவிடாமல் காண்பதில்தான் உள்ளது.

இன்றைய சமுதாயத்தில், வகுப்புவாதம் வேறு வடிவம் எடுத்து விட்டது. முன்னொரு காலத்தில் சாதி இருந்த இடத்தில், இன்று செல்வமும் சமூக அந்தஸ்தும் அதன் புதிய முகமாக வந்திருக்கின்றன. பெருநகரங்களிலும்கூட மனிதர்கள் ஒன்றிணைவது மதிப்புகளின் அடிப்படையில் அல்ல சமூக நிலையில், செல்வம், சமூக நிலை, பேசும் ஆங்கிலத்தின் அளவில்தான். யாரும் நீங்கள் எந்த சாதி? என்று நேரடியாகக் கேட்கவில்லை என்றாலும், நீங்கள் எந்த நிலை? என்று மனதில் அளக்கின்றனர். இந்தச் சமநிலையின்மை உலகின் எல்லா மூலையிலும் வெவ்வேறு வடிவத்திலும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. மேலை நாடுகளில் அது பொருளாதார ஏற்றத்தாழ்வாயும், ஆசிய நாடுகளில் கலாசார மேலாதிக்கமாய், ஆபிரிக்க நாடுகளில் இன வேறுபாடாய் வெளிப்படுகிறது. எங்கு சென்றாலும் சிறப்புரிமை என்பது சிலரை கண்மூடச் செய்கிறது. அவர்களின் வசதியை அவர்கள் உழைப்பின் பலன் என்று நம்பச் செய்கிறது. ஆனால் மற்றவர்களின் துயரத்தை அவர்கள் தோல்வி என்று தவறாக நினைக்கச் செய்கிறது. உண்மையில், சிறப்புரிமை என்பது தீமையல்ல ஆனால் அது வரலாற்றால் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளில் செல்வாக்குச் செலுத்தும் நிலையில்தான் ஆபத்தாகிறது.

இந்நிலையிலும், இன்றைய காலத்தில் வர்க்க ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இளம் தலைமுறை, குறிப்பாக இலங்கையிலும் தமிழ்நாட்டிலும், இந் நாட்களில் பழைய கட்டமைப்புகளை கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. கல்வியும் தொழில்நுட்பமும் பழைய எல்லைகளை மங்கச் செய்கின்றன. இணையம் வாயிலாக, புறக்கணிக்கப்பட்ட சமூகங்களின் குரல்கள் எழுந்துள்ளன. பல இடங்களில், சாதி அல்லது வகுப்பு என்பதைக் கடந்து நட்பு, உறவு, ஒத்துழைப்பு உருவாகி வருகிறது. இது மெல்லிய மாற்றம், ஆனால் உறுதியான முன்னேற்றம்.

ஆனால் புதிய சமத்துவத்தின் வழியிலும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# தமிழர் தம் பண்பாட்டில் பேச்சுக்கலையும் அதன் உலகமயமாதலும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## 5. தமிழ் நிலத்தில் பேச்சுக்கலை

இந்தியப் பெருங் கண்டத்தில் பிரித்தானிய பேரரசின் பிடியிலிருந்து மீள்வதற்காக நடத்திய போராட்ட அரசியலில் பேச்சு முதன்மையானதாக மாறிற்று. "உம்" என்றால் சிறைவாசம் "ஏன்" என்றால் வனவாசம் என்றிருந்த காலமது என்கிறார் சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை தனது அலையும் கலையும் என்ற நூலில்.

மகாத்மா காந்தி, திலகர், சுபாஸ் சந்திரபோஷ், வல்லபாய்பட்டேல், இராஜாஜி, பாரதியார் போன்ற பலரும் எளிய மக்களைப் பெரும் சக்தியாக மாற்றுவதற்கு பேச்சுக் கலையை கையில் எடுத்தனர் (அறிவு, உணர்வு, உந்துதல்).

1920இல் இலங்கையிலும் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரசியல் விடுதலையோடு சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிராகவும் பேச்சுக் கலையை நன்கு பயன்படுத்தினர்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்பும்கூட தமிழர் உரிமைக்கான போராட்டத்திலும் பேச்சுக்கலை வலுவான இடத்தைப் பெற்றது. அகிம்சை அரசியலிலும் ஆயுதப் போராட்ட அரசியலிலும் பேச்சுக் கலை துணை நின்றது.

சாதி ஒழிப்புப் போராட்டங்கள், சமத்துவத்தை நிலைநிறுத்துதல் என்ற தேவைகளுக்கும் மேடைப் பேச்சு வலுச்சேர்த்தது. இடதுசாரி அரசியல்த் தலைவர்கள் தொடர்ந்து எளிய மக்களுடனான தொடர்பாடலாக மேடைப் பேச்சையே கையாண்டனர்.

இந்தியாவில் அம்பேத்கர், இ.வெ.ரா. போன்றோர் சமூக விடுதலை வேண்டி உன்னதமான கருத்துகளை வெளிப்படுத்தினர். உணர்வுகளைத் தூண்டினர். எளிய மனிதர்களை ஒப்புமையற்ற தமது மேடைப் பேச்சுக்கள் மூலம் போராட்ட சக்தியாக மாற்றினர்.

பின்பு அண்ணாத்துரை, மு. கருணாநிதி போன்றோர் தமிழ்ப் பேச்சுக்கு புதிய வெளிச்சம் பாய்ச்சினர். அடுக்குமொழியில் அழகிய தமிழ்ச் சொற்களை அள்ளி வீசினர். அவர்களது அரசியலும் வளர்ந்தது. பேச்சுக் கலையும் தனிவழி சமைத்து உன்னதம் பெற்றது.



பகுத்தறிவுப் பகலவன்களாக பல தசாப்தங்கள் தங்கள் மேடைப் பேச்சைக் கையில் ஏந்தி பலர் வலிமையோடு வலம் வந்தனர். தென்னகத்து அரசியலில் அபார வெற்றிகளை அவர்கள் அள்ளிக் கொள்வதற்கு அழகிய தமிழ் மொழியிலான மேடைப் பேச்சுகளே உதவின. திராவிட அரசியல், சமூக, பண்பாட்டு இயக்கம் மேடைப் பேச்சின் வழியே தனிப்பெரும் விசையாக மாற்றம் பெற்றன.

பலரது பேச்சுகள் பத்திரிகைகளிலும் நூல்களிலும் மறுபிரசுரமாக வெளிவந்தன. உரைநடை இலக்கியமாக அரசியல் பிரசார இலக்கியமாக வளர்ந்து, நிமிர்ந்து நின்றன.

## 6. சினிமா உலகில் பேச்சுக்கலை

1950களில் சுதந்திர வேட்கை எனும் புயல் வீசும் ஓர் இலக்கியமாகத் தமிழ் சினிமாத் துறை விளங்கியது. விடுதலை உணர்வுகளும், கர்நாடக இசையும், நாடகத் தமிழ்ப் பாணியும், பண்பாட்டு ஆடை முறையும் என வலம்வந்தது தமிழ்சினிமா.

இந்த சினிமா, தொழில்நுட்ப பிரசார ஊடகமாக சுதந்திரப் போராட்ட காலத்தில் நின்று நிலைத்தது. ஆனால், திராவிட அரசியல் அதனைத் தனது பேச்சுக் கலையின் ஆற்றல்மிகு மேடையாக்கியது. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோர் சமூக மாற்ற இலக்கியமாக சினிமாவை மாற்றுவதற்கு அழகிய அடுக்கு மொழியாய் தமிழையும் வி.சி. கணேசனின் பேச்சு ஆற்றல் வழியாய், நடிப்பாற்றல் வழியாக தம் கருத்துகளையும் கவனமாகக் கையாண்டனர். அது புயல்வேகம் பெற்றது. மூட நம்பிக்கைகளைத் துடைத்து அழித்தது. புதிய விசைகளை நிலைபெறச் செய்தது. புதிய அரசியல் பாதை சமைத்தது.

தமிழ் சினிமாவின் அதன் சமூகவியலின், அதன் அரசியலின் கைக்கூலியாக பேச்சுக் கலையை திராவிட இயக்கம் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டது. பண்பாட்டின் பாம்புப் புற்றுக்களை வெளிச்சம் போட்டுக் காட்டியது. ரசிகனை உணர்ச்சிமிக்க சமூகப் போராளியாக மாற்றியது.

வி.சி. கணேசன் சிவாஜி கணேசனாகி தமிழ் சினிமாவில் தன் ஒப்புமையற்ற பேச்சாற்றலால், இமாலயக் கலைஞனாக உயர்கிறான். ஐந்து தசாப்தங்கள் அசைக்க முடியாத கலைஞனாகி தமிழ்ப் பேச்சை உலகமயப்படுத்தினான்.



இதேபோல் எஸ்.எஸ். இராசேந்திரனும், எம்.ஜி. இராமச்சந்திரனும், வி.கே. இராமசாமியும் பேச்சுக்கலையைக் கையகப்படுத்தி அரசியல்வானில் ஒளி நட்சத்திரங்களாகினர். எம்.ஜி.ஆரின் அழகும், எழில் மிகு புன்னகையும், இனிமை நிறைந்த குரலும் தமிழக அரசியலின் வான்மதியாக்கின. அவரது வள்ளல் குணம் எவராலும் அசைக்க முடியாத புகழ் வேந்தனாக அவரை மாற்றி தானே பெருமைப்பட்டுக் கொண்டது.

பேச்சுக்கலை எனும் பேராற்றலும், உணர்ச்சி வெளிப்படுத்தும் இயல்பாற்றலும் நடிப்பாற்றலும் சிவாஜியை கட்டபொம்மனாகவும், வீர சிவாஜியாகவும், ராஜராஜ சோழனாகவும், வ.உ.சியாகவும் நிலைநிறுத்தி குதூகலம் கொள்கிறது.

இன்று தமிழ் சினிமா உலகம் தமிழ் மொழியும் அறியாத, தமிழ்பேசும் முறையும் தெரியாத நடிகர், நடிகைகளின் வாடகை முகங்களையும் தோலின் நிறங்களையும் நம்பி நலிந்து கிடக்கின்றது. தொழில்நுட்பப் பிசாசின் பிடியிலுள்ள பிஞ்சுக்குழந்தையாக அலறித் தவிக்கிறது.

தொடரும்...






# நானிலம் போற்றும் நட்பு - 77



– அகணி –
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான கார் நாற்பது நூலில் உள்ள பாடல்கள் சிலவற்றில் உள்ள நட்புப் பற்றிய கருத்துகளைக் கடந்த இதழில் ஆராய்ந்தோம். இன்று கார் நாற்பது நூலில் உள்ள மேலும் சில பாடல்களில் உள்ள நட்புப் பற்றிய கருத்துகளை ஆராய்வோம்.

இப்பொழுது பாடல் 9இனைக் கவனிப்போம்.

"கருவிளை கண் மலர்போல் பூத்தன, கார்க்கு ஏற்று
எரி வனப்பு உற்றன, தோன்றி வரி வளை
முன்கை இறப்பத் துறந்தார் வரல் கூறும்,
இன் சொல் பலவும் உரைத்து".

வரல் என்பது வருதலை என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"கார் காலத்தில் கண் மலர்போலப் பூத்த கருவிளம்பூக்களும், தீயினது அழகையுடைய பூக்களும், வரியையுடைய வளைகள் முன்னங்கையினின்று கழல, இனிய சொற்கள் பலவும் சொல்லிப் பிரிந்து சென்ற தலைவர் வருவார் என்பதனைக் கூறும்".

இயற்கை நிகழ்வுகள் தலைவர் வருகையை குறிகாட்டுகின்றன என்று கூறி தலைவியைத் தேற்றுகின்றாள் தோழி.

இப்பொழுது பாடல் 10இனைக் கவனிப்போம்.

"வான் ஏறு வானத்து உரற, வய முரண்
ஆன் ஏற்று ஒருத்தல் அதனோடு எதிர் செறுப்பக்,
கான் யாற்று ஒலியின் கடு மான் தேர் - என் தோழி!
மேனி தளிர்ப்ப, வரும்".

வய என்பது வலி என்றும், வான் ஏறு என்பது இடி முழக்கம் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"என் தோழியே! வானத்தில் ஏற்படும் இடியின் ஓசை மிகுந்த இக்காலத்தில் வலியினையும், மாறுபாட்டினையும் உடைய எருமை வெகுளுமாறு, குதிரை பூட்டப்பட்ட நம் காதலர் தேர் காட்டாற்றின் ஒலி போலும் ஒலி எழுப்பி உன் மேனி தழைக்க வருவார் என்று கூறியது".

இந்தப் பாடலும் தோழி எவ்வாறு தேற்றுகிறாள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. –

இப்பொழுது பாடல் 11இனைக் கவனிப்போம்.

"புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்,
வணர் ஒலி ஐம்பாலாய்! வல் வருதல் கூறும்
அணர்த்து எழு பாம்பின் தலைபோல் புணர் கோடல்
பூங் குலை ஈன்ற புறவு".

வணர் என்பது குழற்சியையுடைய என்றும், புறவு என்பது காடுகள் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர்.

"தழைத்த கூந்தலையுடையாய்! பாம்பினது படத்தைப்போல, வெண்காந்தள்கள் மலர்ந்த காடுகள், பொருளைக் கொண்டுவரப் பிரிந்து சென்ற தலைவர் விரைந்து வருவார் என்று சொல்லும்".

இந்தப் பாடலிலும் தோழி வெண்காந்தள்கள் தலைவர் விரைந்து வருவார் என்று சொல்லும் என்று கூறி தலைவியைத் தேற்றுகின்றாள்.

இப்பொழுது பாடல் 12இனைக் கவனிப்போம்.

"மை எழில் உண் கண், மயில் அன்ன சாயலாய்!
ஐயம் தீர் காட்சி அவர் வருதல் திண்ணிதாம்
நெய் அணி குஞ்சரம் போல, இரும் கொண்மூ
வைகலும் ஏரும், வலம்".

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "கருமையும், அழகும் பொருந்திய மையுண்ட கண்களையுடைய, மயில்போல சாயலினையுடையாய்! நெய் பூசிய யானைகள்போல கரிய மேகங்கள், நம் தலைவர் வருவது உறுதி என்று கூறி எழாமல் நின்றது".

இந்தப் பாடலில் தலைவர் வருவார் என்று கூறி மேகங்கள் எழாமல் நின்றது என்று கூறி தலைவரின் வருகை பற்றி தலைவிக்கு நம்பிக்கையூட்டுகின்றாள்.

இப்பொழுது பாடல் 13இனைக் கவனிப்போம்.

"ஏந்து எழில் அல்குலாய்! ஏமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பின் பெயல் தாழ, வேந்தர்
களிறு எறி வாள் அரவம் போலக் கண் வௌவி,
ஒளிறுபு மின்னும், மழை".

அல்குல் என்பது பெண் உறுப்பு என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"நம் தலைவரோடு கூடி இன்பந் துய்த்த மகளிரின் சரிந்த கூந்தலினது அழகுபோல, மழைபெய்ய, அரசர் யானையை வெட்டி வீழ்த்துகின்ற ஒலியுடைய வாளினைப்போல ஒளியுடன் மின்னும். இவ்வாறு மழை பெய்வதால் தலைவர் வருவார் என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இப்பொழுது பாடல் 14இனைக் கவனிப்போம்.

"A true friend is one soul in two bodies" said Aristotle.

"செல்வம் தரல் வேண்டிச் சென்ற நம் காதலர்
வல்லே வருதல் தெளிந்தாம் - வயங்கிழாய்!-
முல்லை இலங்கு எயிறு ஈன, நறுந் தண் கார்
மெல்ல இனிய நகும்".

தண் கார் என்பது குளிர்ந்த மேகம் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"அணிகளை உடையவளே! மகளிரின் பற்கள் போன்று முல்லை மலர், நல்ல குளிர்ந்த மேகம், செல்வம் பெற வேண்டிப் பிரிந்துசென்ற நமது தலைவர் விரைந்து வருதல் உண்மை என்று மின்னியது எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

இந்தப் பாடலிலும் தோழி தலைவனின் வருகையை முல்லை மலரைக் காட்டி எதிர்வு கூறுகின்றாள்.

இப்பொழுது பாடல் 15இனைக் கவனிப்போம்.

"திருந்திழாய்! காதலர் தீர்குவர் அல்லர்-
குருந்தின் குவி இணர் உள் உறை ஆகத்
திருந்து இன் இளி வண்டு பாட, இருந் தும்பி
இன் குழல் ஊதும் பொழுது".

குருந்தின் என்பது குருத்த மரத்தின் என்றும், இருந்தும்பி என்பது கரிய தும்பி என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"திருந்திய அணிகளை உடையவளே! குருத்த மரத்தின் குவிர்ந்த பூங்கொத்துக்களின் உள்ளிடத்தில் இருந்து வண்டுகள் பாட, கரிய தும்பிகள் இனிய குழலை ஊத, இந்தக் காலத்தில் காதலர் நம்மை விட்டுப் பிரிந்து இருக்க மாட்டார். விரைந்து வருவார் எனத் தோழி தலைவியிடம் கூறினாள்".

இப்பொழுது பாடல் 16இனைக் கவனிப்போம்.

"கருங் குயில் கையற, மா மயில் ஆல,
பெருங் கலி வானம் உரறும் - பெருந்தோள்!
செயலை இளந் தளிர் அன்ன நின் மேனிப்
பயலை பழங்கண் கொள".

கையற என்பது செயலற்று என்றும், உரறும் என்பது இடிக்கும் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"பெரிய தோளினை உடையவளே! அசோக மரத்தின் இளந்தளிர் போன்ற உன் உடம்பினது பசலை, மெலிவு கொள்ளவும், கரிய குயில்கள் துன்புறவும், பெரிய மயில்கள் களித்து ஆடவும் மேகங்கள் முழங்கியது. இப்படிப்பட்ட காலத்தில் தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியிடம் கூறினாள்".

இந்தப் பாடலிலும் தோழி தலைவியின் உடலில் எற்படும் மாற்றங்களையும், இயற்கை நிகழ்வுகளையும் எடுத்துக் கூறி தலைவன் விரைந்து வருவான் என்று உறுதியாகக் கூறுகின்றாள்.

இன்று எடுத்துக் கொண்ட எல்லா கார் நாற்பது பாடல்களிலும் தோழி தலைவன் விரைவில் வந்துவிடுவான் என்று தலைவிக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது. இந்தப் பாடல்கள் அனைத்தும் நட்பின் பெருமைகளுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram -November 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-14 6:26 PM Page 11



# கைலாய நாதனையே காணலாமே!

பெரி – முத்துராமன்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## பகுதி 2

சென்ற ஆண்டு (2024), எங்கள் ஏகன் அனேகன் குழுவில் தொடர்ந்து பங்கு கொள்ளும் தமிழக அரசின் அதிகாரி குழந்தை வேலு அவர்கள் என்னிடம் இரண்டு வாரத்திற்கு, ஏகன் அனேகன் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாது என்றார். ஏன் என்று நான் அவரிடம் கேட்கவில்லை. ஏதோ அலுவலகப் பணி காரணமாக வெளியூர் பயணம் போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

இரண்டு வாரம் கழித்து, எனக்கு பல யாத்திரைப் புகைப்படங்களை அனுப்பினார். என்ன என்று கேட்டபோது, கைலாயம் சென்றிருந்தேன் என்றார்.

“கைலாயம் செல்வது என்ன அவ்வளவு எளிதா?” என்று கேட்டேன்.

“ஆம்” என்று உறுதிப்படக் கூறினார். உடனே அவரைக் கூட்டிச் சென்றவரை எனக்கு அறிமுகப்படுத்தச் சொன்னேன். 72 வயதான ஓய்வுபெற்ற காஞ்சிபுரம் பள்ளி தமிழாசிரியர் எனக்கு அறிமுகப் படுத்தப்பட்டார். என்னை மறுஆண்டு (2025) கூட்டிச் செல்வதாக அந்த தமிழாசிரியர் கூறினார். இந்த வருடம் வந்த போதுதான் தெரிந்தது, அவர்கள் சென்றது மானசரோவர் கைலாயம் அல்ல. ஆதி கைலாயம் என்று. இந்த ஆண்டு மானசரோவர் கைலாயம் செல்ல தமிழாசிரியருக்கு விசா கிடைக்கவில்லை. அவர் முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

அதற்கு முன்னதாகவே, அவர் கூட்டிச் செல்வார் என்ற நம்பிக்கை குறைந்ததால்,



என்னுடைய மாமா அவர்களைத் தொடர்பு கொண்டேன். அவர்கள், அவர்களை கூட்டிச் சென்ற வட இந்திய சுவாமிஜி ஒருவரை அறிமுகப்படுத்தினார். அவரிடம் நான் கேட்ட முதல் கேள்வி: “எனக்கு வயது 72, கைலாயம் வர இயலுமா?”

அவர் தெளிவாகப் பதில் சொன்னார், “இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்போருக்கு 69 வயதிற்குமேல் விசா கொடுப்பதில்லை. உங்களுக்கு வெளிநாட்டு பாஸ்போர்ட் என்பதால் விசா கிடைக்கும்.”

மேலும் என்னுடைய உடல் நலம் பற்றிச் சொன்னேன். “சங்கல்பம் எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம் நிறைவேறும்” என்றார். அடுத்து, “இந்த வருடம் குறிப்பிட்ட தேதிகளில் யாத்திரை செய்ய வாய்ப்பு கிடைத்தால் மட்டுமே யாத்திரை செய்ய முடியும். அப்படி சந்தர்ப்பம் இல்லையேல் அடுத்த வருடம் அவன் அருள் இருந்தால் பார்க்கலாம்” என்றேன். “இல்லை இந்த வருடமே, நீங்கள் குறிப்பிடும் தேதிகளில் என்னுடைய தொடர்பின் மூலமாக உங்களுக்கு ஏற்பாடு செய்து தருகிறேன்” என்று சொல்லி ஏற்பாடும் செய்து தந்தார்.

